# இனிய சொற்றொடர்கள்

1. காதில் ஒலித்தது
2. மின்னல் வேகத்தில்
3. அல்லும் பகலும்
4. மலர்ந்த முகத்தோடு
5. ஓட்டமும் நடையுமாக
6. அமாவாசை இரவு
7. கொள்ளை ஆசை
8. மையிருட்டு
9. வியர்வை முத்துக்கள் முகத்தில் அரும்பின
10. உச்சி குளிர்ந்தது
11. மனம் பயத்தால்
12. புயல் வேகத்தில்
13. தப்பித்தோம் பிழைத்தோம்
14. பசுமரத்தாணிபோல் பதிந்தது
15. தென்றல் அவனுடைய முகத்தை முத்தமிட்டுச் சென்றது
16. பூக்கள் பூத்து குலுங்கின
17. புன்னகை பூத்தது
18. மாலை மங்கி இருள் கௌவும் நேரம்
19. மனதில் மகிழ்ச்சியும் பெருமையும் நிறைந்து
20. கண்களில் கண்ணீர் தாரை தாரையாக வழிந்தோடியது
21. தேம்பி தேம்பி அழுதான்
22. மகிழ்ச்சி பிறந்தது
23. மண்டை பிளக்கும் வெயிலில்
24. செவிடன் காதில் ஊதிய சங்கு போல
25. சினம் பொங்கியது
26. உள்ளம் நொந்தது
27. வயிறு குலுங்கச் சிரித்தனர்
28. முகம் பூ போல் மலர்ந்தது
29. முகத்தில் புன்னகை பூத்தது
30. மூச்சுப் பேச்சின்றி நடுங்கினார்
31. மனம் பயத்தில் "பட பட" என்று தாளம் போட்டது
32. "கல கல" என்ற சிரிப்பொலி
32. "சிடு சிடு"என்று பேசினார்
33. "சுள் சுள்" என்று வலித்தது
34. மாணவர்கள் கூண்டிலிருந்து வெளியே வரும் சிட்டுக்குருவிகளைப் போல ஒருவரை ஒருவர் தள்ளிக் கொண்டே சென்றனர்
35. வானத்தைப் பிளக்கும் வண்ணம் அலறினார்
36. வாகனம் காற்றைக் கிழித்துக் கொண்டு பறந்தது
37. சூரியன் ஒளிக்கரங்கள்

சுருக்கென்று தைக்க  வெடுக்கென்று துயில் எழுந்தேன்
38. "சிலு சிலு" வென்று தென்றல் வீசிக் கொண்டிருந்தது
39. காட்டுத் தீ போல் பரவியது
40. நகமும் சதையும் போல ஒற்றுமையுடன் இருப்பர்
41. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்
42. மலர்ந்த முகம் வாடியது
43. தேணீக்கள் போல சுறுசுறுப்பான மக்கள்
44. மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை
45. கண் விரிய, உடல் வெடவெடத்தது
46. மனதை உலுக்கியது
47.சூரியன் அதிகாலையில் எழுந்து தன் பொன்னொளிக் கதிர்களை தரணி எங்கும் பரப்பினான்
48. கண் இமைக்கும் நேரத்தில்
49. பார்ப்பதற்கே கண்களுக்கு இதமாக இருந்தது
50. மனதில் கவலை தோன்றியது
51. மட்டற்ற மகிழ்ச்சி
52. வெயிலின் வெப்பம் உடலை சுட்டெரித்தது
53. பாராட்டி சீராட்டி
54. ஆட்டமும் பாட்டமும்
55. மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினான்
56. ஆச்சரியத்தில் ஆழ்ந்தோம்
57. மனதில் இருந்த பயம் நீங்கியது
58. அரக்க பரக்க
59. கதி கலங்கி போனான்
60. தலை தெறிக்க
61. ஆச்சரியத்தில் சிலையாய் நின்றான்
62. வார்த்தைகள் தொண்டை குழியில் மாட்டிக் கொண்டு
63. வயிறு குலுங்க சிரித்தனர்
64. கண்ணும் கருத்துமாய்
65. முகத்தை தொங்க போட்டுக் கொண்டு
66. உதடுகள் ஆத்திரத்தில் துடித்தன
67.கோழி தூக்கம்
68. பசி என் வயிற்றை கிள்ளியது
69. பசியும் பஞ்சமும் அவனை வாட்டின
70. காலையில் பூப்போல் மலர்ந்து எல்லோரையும் தட்டி எழுப்பினோம்
71. சிலு சிலு வென்று வீசிக்கொண்டிருந்த தென்றல் அனைவரையும் மயக்கியது
72. புன்னகை தவழும் முகத்துடன்
73. மகிழ்ச்சியில் மானைப் போல் துள்ளிக் குதித்தேன்
74. கண்ணை இமை காப்பது போல்
75. சிட்டுக்குருவிகளை போல் ஒருவரையொருவர் தள்ளிக் கொண்டே

மாணவர்கள் வகுப்பிற்குச் சென்றனர்
76. கதிரவன் தன் கடமைகளை முடித்துவிட்டு மேற்கே ஓய்வெடுக்கச் சென்றுக் கொண்டிருந்தான்
77. சூரியன் தன் கதிர்களால் பூமியை சுட்டெரித்தான்
78. மகிழ்ச்சி வெள்ள்ம் அவன் மனதில் கரை புரண்டோடியது
79. ஆதவனின் செங்கதிர்கள் மெல்ல பரவ ஆரம்பித்தது
80. காலை பொழுது இனிமையாக மலர்ந்தது
81. பயம் என்னை கௌவியது
82. இருள் எங்கும் பரவ தொடங்கியது
83. மகிழ்ச்சி எல்லையில்லாமல் போயிற்று
84. மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினேன்
85. மகிழ்ச்சி கடலில் மிதந்தேன்
86. உல்லாச வானில் சிறகடித்து பறந்தேன்
87. சொர்கலோகத்தில் இருப்பதை போல் உனர்ந்தேன்
88.வயிறு குலுங்க சிரித்தேன்
89.ஆனந்த கண்ணீர் பொங்கி வழியும் வரை சிரிதேன்
90. புன்னகை மலர்ந்த முகத்தோடு உபசரித்தார்
91.என் உயிரே உடலை விட்டு பிரிந்து சென்று விடும் போல் ஓர் உணர்வு
92. பீதியில் கண்கள் அகல விரிந்தன
93. நெஞ்சி படக் படக் என்று தாளம் போட்டது
94.இதயத் துடிப்பே ஒரு கணம் நின்று விட்டது
95.உடம்பு வேர்வையால் நனைந்து விட்டது
96.அதிர்ந்து போய் தயக்கத்துடன் கண்களை மூடிக்கொண்டு திரும்பினேன்
97.கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை
98.அவள் கண்கள் அகல விரிந்தன
99.ஒவ்வொரு காலடி சத்தமும் அவன் இதய துடிப்பை அதிகபடித்தியது
100.சிலை போல் நின்றான்